விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 14 வியாழக்கிழமை (30.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

# அரிசி விலையை அதிகரிக்க முடியாது

## ஆலை உரிமையாளர்களுக்கு அதிகாரம் கிடையாது

### வர்த்தக அமைச்சர் பந்துல



**(கொழும்பு)**

**அரிசியின் விலையை அதிகரிக்க ஆலை உரிமையாளர்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அரிசி மாபியாக்களும் பிரதான நிலை அரிசி உற்பத்தியாளர்களும் அரிசியின் விற்பனை விலையைத் தீர்மானிக்க முடியாது.

15

## அரிசியின் விலையை அரசே தீர்மானிக்கும்

### விவசாய அமைச்சர் மகிந்தானந்த



**(கொழும்பு)**

**அரிசியின் விலையை அரசாங்கத்தால் மாத்திரமே தீர்மானிக்க முடியும் என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

நெல்லின் விலையை தீர்மானிப்பதற்கு, அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகாரம் இல்லை என விவசாய அமைச்சர் மகிந்

15

# ஊரடங்குச் சட்டம் நாளை தளர்வு

## விரைவில் புதிய சுகாதார வழிகாட்டல்



**(கொழும்பு)**

**கடந்த ஒகஸ்ட் 20ஆம் திகதி முதல் நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நாளை ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஊரடங்கு தளர்த்தப்படுவதாக கோவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு

15

## 3ஆவது தடுப்பூசியாக 'பைஸர்' செலுத்த இலங்கையில் அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் மூன்றாவது (பூஸ்டர்) தடுப்பூசியாக "பைஸர்" தடுப்பூசியை செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சுகாதார சேவைகள்

15

## முல்லை. அரசாங்க அதிபருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனுக்கு கொரோ

15

## மன்னார் தவிசாளர் நியமனத்துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

(மன்னார்)

மன்னார் பிரதேச சபைக்கான புதிய தவிசாளரை நியமித்து, வர்த்தமானி வெளியிடுவதை தடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வடமாகாண உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு

15

## நாட்டில் மேலும் 61 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 61

15

## வடக்கில் 680 ஆரம்ப பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை

### வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு தனியான பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் வெளிமாவட்டங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தனியான பேருந்து சேவையை வழங்கவும் அனுமதி பெறப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

15

## கொரோனா +941

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 941

15

## ஒக்ரோபர் 15ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் திட்டம்

(கொழும்பு)

தென் மாகாணத்தில் உள்ள 200 மாணவர்களுக்கும் குறைந்த பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

15

## கொரோனாவால் கிளிநொச்சியில் மூவர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

15

## தமிழ்த் தேசிய பயணத்தின் அடுத்த கட்டம் ஆரம்பம்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தை அடுத்த கட்டம் நோக்கி எடுத்துச் செல்வதற்கான ஆரம்ப முன்முயற்சியை, தென் கயிலை ஆதீனத்தின் முதற்குரு மகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடி

15

## டொலர் பற்றாக்குறையால்
# துறைமுகத்தில் சிக்கியுள்ள பால்மாவை விடுவிப்பதில் சிக்கல்

(கொழும்பு)

டொலர் பற்றாக்குறை காரணமாக துறைமுகத்தில் சிக்கியுள்ள மூன்று இலட்சத்து 60 ஆயிரம் கிலோகிராம் பால்மாவை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விடுவித்துக்கொள்ள முடியாமல் போகும் என நம்புவதாக பால்மா இறக்குமதியாளர்களின் பேச்சாளர் லக்ஷ்மன் வீரசூரிய நேற்று தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசியப் பொருட்களுடன் கூடிய கொள்கலன் பெட்டிகளை விடுவிக்க தேவையான 50 மில்லியன் டொலர்களை வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

இதனையடுத்து பால்மா இறக்குமதியாளர்களின் வங்கிகளுக்கு அந்த டொலர்கள் கிடைக்கும் என நம்புவதாகவும் வங்கிகளுக்கு டொலர்கள் கிடைத்தால், எதிர்வரும் திங்கட்கிழமை பால்மா அடங்கிய கொள்கலன்களை விடுவித்துக்கொள்ள முடியும் எனவும் வீரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள டொலர் வங்கிகளுக்கு கிடைக்கும் முக்கியத்துவம் பற்றி தெரியாது எனவும் பால்மா அடங்கிய 16 கொள்கலன் பெட்டிகளை விடுவித்துக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# கோவிட்டை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் அபாய நிலை ஏற்படும்
## வைத்திய நிபுணர் சமித கினிகே

(கொழும்பு)

நாட்டில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட கோவிட் அச்சுறுத்தல் நிலைமை தற்போது குறைவடைந்திருந்தாலும் இந்த நிலைமையை அடைவதற்கு சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் பாரிய அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர்.

எனவே தற்போதுள்ள நிலைமையை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் காணப்பட்டதைவிட அதிக அபாய நிலைமை ஏற்படக்கூடும் என்று தொற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் இதுவரையில் 53 சதவீதமானோர் முழுமையாக தடுப்பூசிகளைப் பெற்று பாதுகாப்புப் பெற்றுள்ளனர். 63.6 சதவீதமானோர் முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால் இது மாத்திரம் போதுமானதல்ல. மீண்டுமொரு அபாய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது தனிநபர் உரிமை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் இதில் சமூக உரிமையும் பொறுப்பும் உள்ளடங்கியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். (ம)

# எரிபொருள் தட்டுப்பாடு ஜனவரி வரை இருக்காது
## அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருக்காது என்றும் அதுவரை எரிபொருள் விநியோகத்துக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எண்ணெய் பற்றாக்குறை இருக்கும் என்று பொய்களைப் பரப்ப வேண்டாம் என்றும் அவர் எதிர்க்கட்சிகளைக் கேட்டுக் கொண்டார். (ம)

# புலம்பெயர் தமிழர்களை பேச அழைத்து ராஜபக்ஷக்கள் சிங்கள மக்களை மூடர்களாக்குகின்றனர் - சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் தமிழர்களைக் காட்டி சிங்கள மக்களுடைய வாக்குகளைப் பெற்ற கோட்டாபய அரசாங்கம் தற்போது சிங்கள மக்களை மூடர்களாக்குகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"ஐக்கிய நாடுகள் மன்றம் வரை சென்று இலங்கையினுடைய அரச தலைவர் சில கருத்துக்களை தெரிவித்தார். அதில் இலங்கையினுடைய தமிழ் மக்களின் குரலாக இருக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை "நீங்கள் வாருங்கள் - நாங்கள் பேசுவோம்" என அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இதே அரச தலைவர்தான் தனது தேர்தல் காலத்தில் புலம்பெயர் தமிழர்கள் தமிழீழத்தை பெற்று விடுவார்கள். எம்மை மின்சாரக் கதிரையில் ஏற்றி விடுவார்கள் என்று சர்வதேச சமூகத்திற்கு பிழையான கருத்தைக் கொடுத்து நாட்டை பிளவுபடுத்துகிறார்களென சிங்கள மக்களினிடையே புலம்பெயர் தமிழர்கள் பற்றிய இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து ஆட்சிக்கு வந்தார்.

புலம்பெயர் தமிழர்களைக் காட்டி, சிங்கள மக்களுடைய வாக்குகளை பெற்ற கோட்டாபய அரசாங்கம் தற்போது சிங்கள மக்களை மூடர்களாக்குகின்றது. சிங்கள மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் பொருளாதார நிலையை அழித்து, நாசமாக்கி, சிங்கள இளைஞர்களை இனவாத ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக திசை திருப்பிய இந்த அரசாங்கம் இன்று அரேபிய நாடுகளுக்குச் சென்று கெஞ்சுகின்றது. அரசாங்கம் ஏன் இரண்டு முகத்தைக் கொண்டு இதனைச் செய்கிறது?

புலம்பெயர்ந்தவர்களை பேச அழைப்பது தொடர்பாக, மக்களின் ஆணையை அதிகமாக பெற்ற கட்சி என்கிற அடிப்படையில் இதனை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். ஆனால் இந்த அரசாங்கம் இதயசுத்தியுடன் அதனைச் செய்ய முன்வர வேண்டும்" என்றார். (ம)

# வவுனியாவில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 66, 69 வயதுடையவர்கள் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

மண்ணில் 12 – 06 – 1944



விண்ணில் 27 – 09 – 2021

## திரு. பொன்னன் பாலசிங்கம்

கரணவாய் கிழக்கு மணலாவடியினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னன் பாலசிங்கம் கடந்த 27.09.2021 (திங்கட்கிழமை) அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - சந்தனம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீமதியின் அன்புக் கணவரும் பிரதீபா, பிரதிரூபா, பிரதீபன் (லண்டன்), பிரதிசுபா, அகல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்ற சித்திரம், காலஞ்சென்ற பூமணி (சுவிஸ்), இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற குலசிங்கம் (பிரான்ஸ்), சிவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி, இராசேந்திரம் (சுவிஸ்), தங்கராசா, சிவபாக்கியம், தயாநிதி (பிரான்ஸ்), துளசி (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தராசா, கனகம்மா, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரேமதாஸ், குகாதரன், மோகனாதேவி (லண்டன்), திலீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரகாஷ் (ஜேர்மனி), பிரிந்திகா, திலைக்சனா, ஜீவகன், ஜீவலக்ஷனா, சாகிர்த்யன், பிரவீன் (லண்டன்), கனிக்கா (லண்டன்), சிவஜனன், தாமிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.09.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு,
மணலாவடி.

077 625 8347

தகவல்:-
குடும்பத்தினர்

# துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில்
உள்ளக கணக்காய்வுப் பிரிவில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு. S.அகிலகுமார் அவர்களின் பாசமிகு புத்திரன்

## அகிலகுமார் ஆரகன்



மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரே! கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா
சாந்தியடைய எங்கள் கண்ணீர் துளிகளைக்
காணிக்கையாக்குகிறோம்.


பிரிவுத்துயருடன்....
பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# கோட்டாபய அரசிற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடுவோம்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**"தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் கோட்டா பய அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடு வோம்" - இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



கெரவலப்பிட்டிய மின் உற்பத்திநிலையத்தின் பங்குகள் வெளிநாட்டு நிறுவன மொன்றுக்கு வழங்கப்படுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேசிய வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவற்றை விற்பனை செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நான் கடும் எதிர்ப்பு தெரிவிப்பது டன் அத்தகைய நடவடிக் கையை ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.

கொரோனாத் தொற்றால் தற்போது வீதியில் இறங்கிப் போராட முடியவில்லை. வைரஸ் தொற்று கட்டுக்குள் வந்த பின்னர் எமது எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறும்" என அவர் தெரிவித்தார்.(நி-5)

## நவம்பர் மாதம் பல்கலைக்கழகங்களை மீளத் திறக்க எதிர்பார்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பல்கலைக்கழகங்களை மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்புசிசெலுத்தும்பணிகளை அரசாங்கம் அடுத்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யுமாயின், எதிர்வரும் நவம்பர் மாதம் பல்கலைக்கழகங்களை மீள திறக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல வருடங்களுக்கு பின்னர் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பல்கலைக்கழகங்களுக்கு 42 ஆயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான அதிகரிப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (நி-5)

## சீன உர இறக்குமதிக்கு தடைவிதித்த இலங்கை

(கொழும்பு)

சீன நிறுவனத்திடமிருந்து இயற்கை உரங்கள் இறக்குமதி செய்வதை அரசாங்கம் நிறுத்திவைத்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று அறிவித்தார்.

உரங்களின் மாதிரிகள் மீதான சோதனைகள் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்களைக் கண்டறிந்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இயற்கை உரங்களை வழங்க சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் இரத்துச் செய்யவேண்டும். மேலும் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாவுடன் கூடிய இயற்கை உரத்தை மீண்டும் நாட்டிற்குள் நுழைய விவசாயத்துறை அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## சமையல் எரிவாயு விலை குறைவடையலாம்-லசந்த

(கொழும்பு)



சமையல் எரிவாயு நிறுவனங்களை இணைத்து புதிய நிறுவனம் அமைத்திருப்பதன் ஊடாக சமையல் எரிவாயு விலைகளை 125 முதல் 150 ரூபாய் வரை குறைக்கவாய்ப்பு இருப்பதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

சந்தையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது இத்தகவலை தெரிவித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலை உயர்ந்தமை மற்றும் டொலர் அதிகரிப்பு காரணமாக விலை அதிகரிக்க கம்பனிகள் கோரின. இது குறித்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை ஆராய்ந்து அமைச்சரவை உப குழுவொன்றை நியமித்தது.

நிறுவனங்களின் செயற்திறனின்மையை சீர்செய்து பாவனையாளர்களுக்கு அதன் நன்மையை அளிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையிலே எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது.

எனவே இரு சமையல் எரிவாயு நிறுவனங்களையும் இணைத்து அரச நிறுவனமாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள விலையைவிட 125-150 ரூபாய் வரை குறைக்க வாய்ப்புள்ளது.

இதற்காகவே புதிய நிறுவனம் அமைக்கப்பட்டு தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது என லசந்த தெரிவித்தார். (நி-5)

## வரிசை யுகத்திற்குள் மீண்டும் நாடு

### வஜிர எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்து வரும் வினைதிறனற்ற செயற்பா டுகள் காரணமாக நாடு மீண்டும் வரிசையில் நிற்கும் யுகத்தை நோக்கி தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று செய் தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர்,

நாட்டின் தற்போதைய அரசாங்கம் சர்வதேச ரீதியாக நாட்டை சரியாக கையாளவில்லைஎன்பதால், தற்போது, அதிகளவான தொழிற் சாலைகள் மூடப்படும் நிலைமைக்கு வந்துள்ளது. அரசாங்கம் முன்னெடுத்து வரும் வினைத்திறனற்ற செயற்பாடுகள் காரணமாக நாடு மீண்டும் வரிசையில் நிற்கும் யுகத்தை நோக்கி தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல், ஓகஸ்ட் மாதங்களில் நாடு பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடி நிலைமைக்கு உள்ளாகி, மக்கள் கடும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

வரலாற்றில், வினைத் திறனற்ற, பலவீனமாக அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாடு பொருளாதார ரீதியாக அழிவை சந்தித்தது. அப்படியான அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டை மீண்டும கட்டியெழுப்பியது என அவர் தெரிவித்தார். (நி-5)

# தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது மும்பை



பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய ஐ.பி.எல். ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் 6 விக்கெட்டுகளினால் வெற்றி வற்றுள்ளது.

2021 இந்தியன் பிரீமியர் லீக்கின் 42 ஆவது ஆட்டம் நேற்றுமுன்தினம் டுபாயில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் மற்றும் கே.எல்.ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை களத்தடுப்பை தேர்வுசெய்ய பஞ்ஙப் முதலில் துடுப்பெடுத்தாடி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அணி சார்பில் அதிகபடியாக அடன் மார்க்ரம் 42 (29) ஓட்டங்களையும், தீக் ஹூடா 28 (26) ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

136 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி, 19 ஆவது ஓவரின் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களை பெற்று வெற்றியை பதிவு செய்தது.

அணி சார்பில் அதிகபடியாக சௌரப் திவாரி 45 (37) ஓட்டங்களையும், ஹர்த்திக் பாண்டியா 40 (30) ஓட்டங்களையும் அதிகபடியாக எடுத்தனர்.

இந்த வெற்றி 2021 ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் கட்டத்தில் நடப்பு சம்பியனான மும்பை அணி பெறும் முதல் வெற்றியாகும்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை சார்ஜாவில் நடைபெற்ற 41 ஆவது லீக் போட்டியில் ரிஷப் பந்த் தலைமையிலான டெல்லி கேப்பிட்டல்ஸ் - இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகள் மோதின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்ட ங்களை பெற்றது.

128 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி, 18.2 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 130 ஓட்டங்களை பெற்று வெற்றியிலக்கை கடந்தது. (4-6)

# எங்கள் ஆட்டம் இன்னும் வெளிப்படவில்லை

## ரோஹித்


ஐ.பி.எல்.2021 இருபது-20 கிரிக்கெட்டின் 42 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ்- பஞ்சாப் கிங்ஸ் அணிகள் நேற்று முன்தினம் பலப் பரீட்சை நடத்தின.

இப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்திய பிறகு மும்பை இந்தியன்ஸ் அணி கப்டன் ரோகித் சர்மா கூறியதாவது:-

நாங்கள் எங்களுடைய சிறந்த ஆட்டத்தை இன்னும் வெளிப்படுத்தவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், இது நீண்ட தூரம் கொண்ட தொடர்.

நாங்கள் எங்களுடைய திட்டத்தில் உறுதியாக இருக்க வேண்டியது அவசியம். சூழ் நிலையை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. அதில் இருந்து ஏராளமான உறுதியை பெற முடியும். ஹர்திக் பாண்ட்யா சூழ்நிலையை புரிந்து கொண்டது அணியின் பார்வையில் அது மிகவும் முக்கியமானது.

காயத்திற்குப் பிறகு அவர் களத்தில் நீண்ட நேரம் நின்று விளையாடியது அவ



ருக்கும் முக்கியமானது" என தெரிவித்தார். (4-6)


## இன்றைய போட்டி




## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2416

**சௌந்தர்யா**

ஏனுங்க வரும்போது கால்கிலோ கத்திரிக்காய் அரைக்கிலோ அவரைக்காய் முக்கால் கிலோ முள்ளங்கி ஒரு கிலோ உருளைக்கிழங்கு வாங்கிட்டு வாங்க




செய்யப் போறது உப்புமா.. இதுல எதுகை மோனை வேற.... போ

**யதுஷா**

மூதேவி நாங்க ஸ்கூல் படிக்கும் போது வந்துருக்க வேண்டியது தானே...?




இப்போ எல்லாருமே படிச்சு முடிச்சிட்டு வேலைக்கு போறோம்..இப்பவும் எங்களுக்கு லீவ் இல்லை...

**நிவேதா**

மாமியார் சாதம் வைக்க அரிசி ஊற வச்சு கழுவி வை மா... நாங்க மார்க்கெட் வரைக்கும் போய்ட்டு வரோம்




மருமகள்- எந்த சோப் பவுடர்ல ஊற வச்சி எந்த சோப்புபோட்டுக் கழுவனும்.
மாமியார்- எது சோப்பு போட்டு கழுவ போறியா

**தாருசன்**

நம்ம வாழ்க்கையை பிரம்மன் எழுதுனதுக்கு பதிலா



இயக்குனர் விக்ரமன் எழுதியிருந்தா ஒரே பாட்டுல பணக்காரனா ஆகியிருப்பமோ என்னமோ...

**திலக்ஷன்**

கடவுள் கேட்கவில்லை கொடுக்கிறார்கள் மனிதன் கேட்கிறான் மறுக்கின்றார்கள் சிந்திக்க வைத்த புகைப்படம்



**யரோஜ்**

நாங்கலாம் அந்த காலத்துல மூனாவது மாடில இருந்து அசால்டா கீழ விழுவோம்...



நீங்க என்னடானா கட்டில்ல இருந்து கீழ விழுந்ததுக்கே மூஞ்சியப் பேத்துக்கிறீங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

30.09.2021

புரட்டாதி 14, வியாழக்கிழமை
நவமி முன்னிரவு 7.28 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 11.53 மணிவரை
சுபநேரம் 1.32-9.02 மணிவரை
இராகு காலம் -1.32-3.02 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்

வள்ளுவன்


மேஷம்
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.


ரிஷபம்
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்
நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும்.


கடகம்
பணப்புழக்கம் அதிகரித்தாலும், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்கள் அதிகரிக்கும்.


சிம்மம்
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி
வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்
விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் வாய்ப்புண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


விருச்சிகம்
குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.


தனுசு
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், ஆனந்தமான நாள், வருமானம் திருப்தி தரும்.


மகரம்
கடன் பிரச்சினைகளில் சாமர்த்தியமாக நடந்து கொள்வீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.


கும்பம்
தொழில் நன்மைகருதி அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்பீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிறர் உதவியுண்டு.


மீனம்
உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும் பயணங்களால் பலனுண்டு.

வேதனையைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுகிறான்.

# நாட்டில் வருடாந்தம்45,000 பேர் இருதய நோயால் உயிரிழப்பு

## இருதய நோய் விசேட மருத்துவ நிபுணர்

**(கொழும்பு)**

**நாட்டில் வருடாந்தம் 45,000 பேர் இருதய நோயினால் உயிரிழப்பதாக இலங்கை இருதய நோய் விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கத்தின் தலைவர், இருதய நோய் விசேட மருத்துவர் நிபுணர் அனிந்து பத்திரன தெரிவித்துள்ளார்.**

உலக இருதய தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. 'ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இருதயபூர்வமாக இணைவோம்' என்ற தொனிப்பொருளில் இம்முறை உலக இருதய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (நி-5)

# அரசாங்கத்திலிருந்து வெளியேறும் எண்ணம் பங்காளி கட்சிகளுக்கு கிடையாது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிகட்சிகள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற விரும்பினால் தாராளமாக வெளியேறலாம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அரசாங்கத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு கூட்டணி என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே அனைத்து சவால்களையும் வெற்றிக் கொண்டு முன்னேற்றமடைய முடியும் என்றே பிரதமர் அனைத்து தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கினார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் நோக்கம் பங்காளி கட்சியினருக்கு கிடையாது என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியின் ஊடாக அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். கடந்த காலங்களில் அரசாங்கம் எடுத்த ஒரு சில தீர்மானங்கள் தொடர்பில் பங்காளி கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தினோம்.

கெரவலப்பிடிய மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இவ்விடயம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கடந்த வாரம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சீர் செய்வதுடன், அபிவிருத்தி பணிகளையும் முன்னெடுத்து செல்வது அவசியமாகும். இதற்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம் என பிரதமர் பங்காளி கட்சியின் தலைவர்களிடம் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்குள் காணப்படும் பிரச்சினைகளுக்கு உள்ளக பேச்சு வார்த்தையின் ஊடாக மாத்திரம் தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். அதனை விடுத்து முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் கருத்து வெளியிடுவதை அனைத்து தரப்பினரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரம் தற்போதைய சவால்களையும் வெற்றிக் கொள்ள முடியும் என பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

பங்காளி கட்சியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேற விரும்பினால் தாராளமாக வெளியேறலாம் என பிரதமர் குறிப்பிட்டதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திமுற்றிலும் பொய்யானது. அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் நோக்கம் எவருக்கும் கிடையாது எனஅவர் தெரிவித்தார். (நி-5)

# நடுக்கடலில் தத்தளித்த சோமாலிய மீனவர்களை மீட்டு கரை சேர்த்த இலங்கை மீனவர்கள்

(கொழும்பு)
நடுக் கடலில் தத்தளித்த நான்கு சோமாலிய மீனவர்களை காப்பாற்றிய பேருவளை மீனவர்கள் அவர்களில் இருவரை தமது ஆழ்கடல் மீன்பிடி படகின் மூலம் பேருவளை மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வந்துள்ளனர். 25 மற்றும் 30 வயதான சோமாலிய மீனவர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்காக சென்ற மீனவர்கள், நடுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு சோமாலிய மீனவர்களை கண்டுள்ளனர்.

அந்த மீனவர்களில் தலா இரண்டு பேரை மீனவர்கள் இரண்டு படகுகளில் ஏற்றிக் கொண்டுள்ளனர். ஏனைய இரண்டு பேரை ஏற்றிய ஆழ்கடல் மீன்பிடி படகு அடுத்த சில தினங்களில் பேருவளை மீன்பிடி துறைமுகத்திற்கு வந்து சேரவுள்ளது என கரையோர பாதுகாப்பு படை அதிகாரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கரைக்கு அழைத்து வரப்பட்ட சோமாலிய மீனவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்படவுள்ளதுடன் அடுத்தக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (நி-5)

# கொவிட் தடுப்பூசி செலுத்தியோர் விகிதம் தென்மராட்சியில் குறைவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை இதுவரை ஐந்நூறுக்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்களை குணப்படுத்தி வீடுகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் திருமதி டயாழினி மகேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் எமது வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் இதுவரை 500இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று குணமாகியுள்ளனர்.

வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்ற 12தொற்றாளர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த போதிலும் அவர்களில் 10பேர் 75வயதிற்கு மேற்பட்டவர்கள்.

இருவர் 50வயதிற்கு உட்பட்டவர்களாக உள்ள போதிலும் அவர்கள் நீண்ட காலமாக தீராத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள். அத்துடன் தடுப்பூசி செலுத்தாதவர்களே அதிகம் உயிரிழந்தனர்.

ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் தென்மராட்சியில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தியோர் விகிதம் குறைவாகக் காணப்படுகிறது.

வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் உயிரிழந்தவர்களில் சிலர் நோய் தீவிரமானதன் பின்னரே வைத்தியசாலைக்கு வந்தவர்கள்.

அவர்கள் வைத்தியசாலைக்கு வந்து சில நிமிடங்களிலேயே உயிரிழந்தனர். கொரோனா நோயாளர்கள் நோய் அறிகுறி தென்பட்டவுடன் சிகிச்சை பெற வர வேண்டும். அப்போது தான் விபரீதங்களைத் தவிர்க்க முடியும்.

மக்களின் ஒத்துழைப்பு இன்றி எதுவுமே செய்ய இயலாது எனத் தெரிவித்தார். (4-5-30)

## யாழ்.பல்கலையின் பங்கேற்புடன்

# இருதய நோய் தொடர்பான சர்வதேச ஆய்வு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய இராஜ்ஜியத்தின் பேர்மிங்காம் பல்கலைக்கழகம், லிவர்பூல் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கூட்டிணைப்பில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் தேசிய சுகாதார ஆய்வு நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோய் தொடர்பான சர்வதேச ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாய்வானது தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ நடைமுறைகளை நீண்ட கால ஆய்வுகளின் ஊடாக உருவாக்கும் நிலையமொன்றினை யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாய்வானது கலாச்சார ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகக் காணப்படுகின்றது.

இவ்வாய்வினை வினைத்திறனுடனும் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் மேற்கொள்ளுவதற்கு சகல தரப்பினரும் ஆய்வாளர்களினதும் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம் என இலங்கைக்கான ஆய்வு ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் ரா.சுரேந்திர குமாரன் அறிவித்துள்ளார்.

(இணையத்தளம்:http://project.jfn.ac.lk/global-af-reach/

முகப்புத்தகம்:Global AF Reach Sri Lanka

கீச்சகம் :@atrialFib-LK

தொலைபேசி இலக்கம்-021 2218178) (4-5-33)

# வர்த்தக நிலையங்களில் கள ஆய்வு



(குப்பிழான்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனின் கட்டளைக்கமைவாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மருதனார் மடம், சுன்னாகம், மல்லாகம் ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற வர்த்தக நடவடிக்கை( சீனி, அரிசி, எரிவாயு, கோதுமை மா, அங்கர்) தொடர்பான முறைப்பாடுகள் விசாரணைகள் செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமான செயலில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. (4-5-18)

## பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 தொற்றுக் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம் ஒன்றினை ஆறுதல் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

க.பொ.த (சா/த) 2021 மாணவர்களுக்கு ஆறுதல் நிறுவனத்தினுடைய www.aaruthal.lk இணையத்தளத்தில் பிரதான பாடங்களின் மாதிரி வினாத்தாள்களும் புள்ளித் திட்டமும் இலவசமாக எதிர்வரும் 6 ஆம் திகதிமுதல் பதிவேற்றப் படவுள்ளன.

அதனை மாணவர்கள் பெற்று பயன் பெறுவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும் என ஆறுதல் நிறுவனத்தில் பணிப்பாளர் சுந்தரம் டிவகலால தெரிவித்துள்ளார். (4-5)

# திருட்டில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை மாலை தாக்குதல் நடத்தி கொள்ளையில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனம் ஒன்றில் வந்த வன்முறைக்குழுவொன்று கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் நுழைந்து பொருட்களை அடித்து சேதப்படுத்தி வீட்டில் இருந்தவர்கள் தப்பித்துச் சென்ற நிலையில் வீட்டில் இருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (4-5-30)

# கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணை முருகமூர்த்தி வீதி எனும் முகவரியைக் கொண்ட கைலாசப்பிள்ளை ஜெயமாலா என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்கள் தவறவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உரியவர் தகுந்த ஆதாரங்களை காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (4-5)

# சட்டவிரோதமாக கடத்திவரப்பட்ட 1,300 கிலோ மஞ்சள் மீட்பு

(குப்பிழான்)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட சுமார் 1300 கிலோ மஞ்சள் பாசையூர் பகுதியில் வைத்து நேற்றுப் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவிலிருந்து பாசையூர் பகுதிக்கு இரண்டு படகுகளில் மஞ்சள் கடத்தி வரப்படுவதாக யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம்



மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த மஞ்சளைக் கடத்தி வந்த குற்றச்சாட்டில் பாசையூரைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மஞ்சளை சுங்கத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (4-5-18-101)



கிராமத்திற்கு ஓர் வீடு திட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி-மாசேரி கிராமத்தில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை வீடொன்றிற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீடு அமையப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுபேசன்)

# கொரோனா அபாயம் தணிகிறது

## அமெரிக்க ஆய்வை மேற்கோள்காட்டி தகவல்



(கொழும்பு)

**கொரோனா வைரஸ் பரவலின் வீரியமிக்க காலகட்டம் நிறைவடைந்து வருவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பிரதானி பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

வெளியாகியுள்ள அமெரிக்க ஆய்வொன்றினை மேற்கோள்காட்டி அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றின் மிக மோசமான நிலைமை நிறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# 500 கொள்கலன்கள் சீனியை சதொசவிற்கு வழங்க தீர்மானம்

(கொழும்பு)

துறைமுக அதிகார சபையின் பொறுப்பிலுள்ள சுமார் 500 சீனி கொள்கலன்களை சதொசவிற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த சீனி கொள்கலன்களை சதொசவிற்கு வழங்குவதற்கு தமது சங்கம் இணங்கியுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட சீனி கொள்கலன்களே இவை என அவர் தெரிவித்தார்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் சீனி இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக லங்கா சதொச தலைவர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் ஆனந்த வீரசேகர தெரிவித்தார். இதன்போது குறித்த சீனிதொகையை சதொசவிற்கு வழங்கும் விலை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# நாடு திறந்ததும் மீண்டும் போராட்டம்

### அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டணி முடிவு

(கொழும்பு)

நாட்டை மீண்டும் திறந்தவுடன் உடனடியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு ஆசிரியர், அதிபர்கள் தொழிற்சங்க கூட்டணி முடிவு செய்துள்ளது.

தங்கள் சம்பள பிரச்சினையை முதன்மை கோரிக்கையாக வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்கும் பாடசாலைகளுக்கு செல்வதனை தவிர்ப்பதற்கும் ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, இந்த முறை, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பல தொழிற்சங்கங்கள் போராட்டங்களில் பங்கேற்க இணக்கம் தெரிவித்துள்ளன.. (நி-5)

# அரிசி ஆலை மாபியாக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்

### அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

அரிசிக்கான நிர்ணய விலையை நீக்கி, நெல்லுக்கு 50 ரூபாய் என்று விலையை நிர்ணயித்திருப்பதன் மூலம் அரசாங்கமும் விவசாயத்துறை அமைச்சரும் அரிசி ஆலை மாபியாக்களையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்பது தெளிவாகிறது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் மூலம் விவசாயிகளுக்கு நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, நுகர்வோருக்கும் நியாயமான விலையில் அரிசியை கொள்வனவு செய்ய முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (நி-5)



# யானை தாக்கியதில் விவசாயி பலி!

(கொழும்பு)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளாமைச்சேனை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிர் இழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும்போக வேளாண்மை செய்கைக்கு தனது வயலை தயார் படுத்தும் நிலையில் வயலில் தங்கிவேலை செய்து வந்த நிலையில் நேற்று அதிகாலை வயல் பிரதேசத்திற்கு வந்த யானை குறித்த நபர் தங்கியிருந்த வாடியை சேதப்படுத்தியதுடன் விவசாயியையும் தாக்கியதில் குறித்த விவசாயி உயிரிழந்துள்ளார். யானை தாக்கியதில் உயிரிழந்தவர் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை பாடசாலை வீதியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அலியார் முகம்மது காசிம் (வயது 54) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# பொல்லால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை

(கொழும்பு)

பொல்லால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்றுதெரிவித்துள்ளது.இந்தச் சம்பவம் கண்டி மாவட்டம், பல்லேகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 61 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். நபர் ஒருவர் குறித்த பெண்ணின் தலையில் பொல்லால் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

சந்தேகநபருக்கும் குறித்த பெண்ணுக்கும் இடையில் நீண்ட நாட்களாக இடம்பெற்று வந்த முறுகல் நிலையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகிய 13 பேர் வைத்தியசாலையில்

(ஹற்றன்)

தோட்டத் தொழிற்றுறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதினால் 13 பேர் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, குளவிகொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. (நி-5)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber: 076 636 3378

E.mail:

valampurii@yahoo.com

## பாரதம் / வெளிநாடு

# பூமியை பாதுகாக்க உலக தலைவர்கள் முன்வர வேண்டும்



### பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கிரேட்டா தன்பெர்க்

(ரோம்)

**“மனிதர்கள் வாழ ஒரே ஒரு பூமி தான் இருக்கிறது. இன்னொரு பூமி இல்லை. மனிதர்கள் வாழத் தகுதியுடைய இன்னொரு கோள் இதுவரை கண்டறியப்படவில்லை. அதனால் நமக்கு இருக்கும் ஒரே வழி இப்போது நாமிருக்கும் இந்த பூமியை பாதுகாப்பது மட்டுமே. அதைச் செய்வோம். உலகத் தலைவர்கள் அதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுங்கள்” என்று கிரேட்டா தன்பெர்க் தெரிவித்தார்.**

இத்தாலி நாட்டில் உள்ள மிலன் நகரில், பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் சுமார் 190 நாடுகளைச் சேர்ந்த இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

பருவநிலை மாற்றம், உலகம் வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் மாசு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்த இந்த மாநாட்டில் பேசப்பட்டது.

இதில் கலந்து கொண்டு பேசிய சுவீடன் நாட்டைச் சேர்ந்த கிரேட்ட தன்பெர்க், உலக நாடுகளின் தலைவர்களை கடுமையாக விமர்சித்தார்.

அவர் பேசிய போது, “இது போன்ற மாநாடுகளை நடத்துவதன் மூலம் இளம் தலைமுறையினரின் கோரிக்கைகள் கேட்கப்படுவதாக உலக தலைவர்கள் காட்டிக் கொள்கின்றனர்.

ஆனால் நாம் பேசிக் கொண்டே இருக்கிறோம். அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை” என்று தெரிவித்தார். (நி-5)

# இந்திய ஊடகத்தினரை பாராட்டிய ஜோ பிடன்

## அமெரிக்க ஊடகத்தினர் அதிருப்தி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஊடகத்தினரை விட இந்திய ஊடகத்தினர் சிறப்பாக நடந்து கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் பாராட்டினார்.

அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் கடந்த 24 ஆம் திகதி குவாட் உச்சி மாநாடு நடைபெற்றது.

இதில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது இரு நாடுகளைச் சேர்ந்த ஊடகத்தினரையும் ஒப்பிட்டு பேசிய ஜோ பிடன், அமெரிக்க ஊடகத்தினரை விட இந்திய ஊடகத்தினர் சிறப்பாக நடந்து கொண்டனர் என்று குறிப்பிட்டார்.

ஜோ பிடனின் இந்த கருத்து அமெரிக்க ஊடக த்தினரிடையே பல்வேறு விமர்சனங்களை எழுப்பியது.

அமெரிக்க ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் ஜோ பிடனின் கருத்து வருத்தத்திற்குரியது என்று தெரிவித்தனர். (நி-5)

# தடுப்பூசி பெறாத சுமார் 600 ஊழியர்களை பணி நீக்கம் செய்த யுனைடெட் ஏயர்லைன்ஸ்

(வோஷிங்டன்)

கொவிட்-19 தடுப்பூசிசெலுத்திக் கொள்ளாத சுமார் 600 ஊழியர்களை அமெரிக்க விமான நிறுவனமான யுனைடெட் ஏயர்லைன்ஸ் பணி நீக்கம் செய்துள்ளது.

இது தொடர்பாக யுனைடெட் ஏயர்லைன்ஸ் நிறுவனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

593 ஊழியர்கள் தடுப்பூசி செலுத்தல் திட்டத்துக்கு இணங்கவில்லை என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

இதன் விளைவாக, அவர்களை எமது நிறுவனத்திடமிருந்து பிரிப்பதற்கான செயல்முறையை நாங்கள் தொடங்கியுள்ளோம் என்று தெரிவித்துள்ளது. (நி-5)

# பட்டாசுகளை வெடிப்பதற்கு டில்லியில் தடை

(டில்லி)

டில்லியில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை எந்த வகையான பட்டாசுகளையும் வெடிக்கக் கூடாது என மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பட்டாசுகளை வெடிப்பதினால் ஏற்படும் காற்று மாசுபாடு காரணமாக கொரோனா நோயாளிகள் கடுமையான மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் என மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

எனவே மக்களின் உயிரைக் காப்பாற்றும் நோக்கத்தில் நேற்று முன்தினம் முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வந்துள்ளது.

மேலும் பட்டா சுகளை விற்பனை செய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொரோனாத் தடுப்பூசிக்கு பதிலாக விசர் நாய்த் தடுப்பூசி

(டில்லி)

சுகாதார மையத்தில் கொரோனாத்தடுப்பூசிபோடச் சென்றவருக்கு, தவறுதலாக விசர்நாய்க்கடி தடுப்பூசி செலுத்தப்பட்ட அதிர்ச்சி சம்பவம் தானேவில் நடைபெற்றுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் தானே நகராட்சிக்கு உட்பட்ட கல்வா என்ற பகுதியில் ஆட்கோ னேஷ்வர் சுகாதார மையம் உள்ளது. இங்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி முகாம் செயற்பட்டு வருகிறது. மேலும், பல்வேறு நோய்களுக்கு மருந்து அளிக்கப்பட்டு வருகிறது.


கடந்த திங்கட்கிழமை ராஜ்குமார் யாதவ் என்பவர் கோவிஷீல்டு கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொள்ள சென்றிருக்கிறார். அப்போது அங்கு ஒரு இடத்தில் நீண்ட வரிசை நின்றிருப்பதை பார்த்த அவர், அது கொரோனாத் தடுப்பூசிசெலுத்துவதற்கான வரிசை என நினைத்து நின்றுள்ளார்.

அவருக்கு செவிலியர் ஒருவர் தடுப்பூசி செலுத்தியுள்ளார்.

அதன்பிறகுதான் தெரிய வந்துள்ளது, அந்த வரிசை விசர்நாய்க்கடி எதிர்ப்பு தடுப்பூசிசெலுத்த இருந்தவர்கள் என்று. இதனால் யாதவ் அதிர்ச்சி அடைந்தார்.

இந்தத் தகவல் மேல் அதிகாரிகளுக்குத் தெரியவர, கவனக்குறைவாக செயற்பட்ட செவிலியரை பணி இடை நிறுத்தம் செய்துள்ளனர்.


மேலும், தடுப்பூசிசெலுத்தப்பட்ட யாதவை கண்காணித்து வருகின்றனர். (நி-5)



அமெரிக்காவைச் சேர்ந்த நாய்க்கு மிக நீளமான காது இருப்பதால், கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது. ‘லூ’ எனப் பெயரிடப்பட்ட நாய்க்கு 3 வயதாகின்றது.

லூவின் காது 12.38 அங்குலம் நீளம் கொண்டதாக இருக்கிறது. உலகிலேயே மிக நீளமான காது கொண்டிருப்பதால், கின்னஸ் சாதனை புத்தகத்தில் லூ இடம் பிடித்திருக்கிறது.

# மேலும் 41 பேருக்கு கொரோனாத் தொற்று



(நெளுக்குளம்)

வவுனியாவில் மேலும் 41 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர்,வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகளில் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 41 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கொரோனாச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-299)

# கரும்புத் தோட்டக் காணிகளை நெற்செய்கைக்கு வழங்க தீர்மானம்

(கிளிநொச்சி)

பல ஆண்டுகளாக சில தனியாரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பின்கீழ் இருந்துவந்த சுமார் 196 ஏக்கர் ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணியை பிரதேசத்திலுள்ள பயிர்ச்செய்கை நிலமற்ற பயனாளிகளுக்கு தற்காலிகமாக வழங்குவதற்கான பட்டியல் பிரதேச அமைப்புக்களால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியை மீட்டுத்தருமாறு பிரதேச பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இது தொடர்பில் தொடர்ச்சியாக மாவட்டச் செயலக மட்டத்தில் நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர், அந்தக் காணியை பிரதேச பொதுமக்களுக்கே வழங்குமாறு முன்னதாக பணிப்புரை வழங்கியிருந்தார்.

இந்தக் காணியில் படிப்படியாக கரும்புச் செய்கையை ஆரம்பித்து, முழு அளவிலான ஒரு கரும்புத்தோட்டமாக அதனை வளர்த்தெடுத்து நீண்டகால அடிப்படையில் சர்க்கரை, பாணி மற்றும் சீனி உற்பத்திகளுக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவர் பிரதேச அமைப்புக்களிடம் கோரியிருந்தார். முழு அளவில் கரும்புச் செய்கையை ஆரம்பிக்கும் வரையில் அந்தக் காணியை பிரதேசத்திலுள்ள பயிர்ச்செய்கை நிலங்களற்ற பொதுமக்களுக்கு தற்காலிகமாக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வழங்குவதற்கான கோரிக்கையையும் இதன்போது அவர் ஏற்றுக்கொண்டார்.

இதன்படி, பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் இணைந்து, அந்தப் பகுதியிலுள்ள பயிர்ச்செய்கை நிலங்களற்றவர்களுக்கு இம்முறை காலபோகத்துக்கு தலா ஒரு ஏக்கர் நிலத்தை தற்காலிகமாக வழங்குவதற்கான பயனாளிகள் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இந்தப் பட்டியலை, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கனிடம் நேற்று பிரதேச பொது அமைப்புக்கள் கையளித்தன. மேற்கொண்டு உரிய முறையில் காணிகளை அளந்து பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இந்தப் பட்டியல் கரைச்சிப் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-5)




# தடுப்பூசி அட்டை பரிசோதனை வவுனியாவில் முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணி பகுதியில் நேற்று தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி.திலீபன் தலைமையில் , வவுனியா சுகாதார வைத்திய பணிமனையினர், நெடுங்கேணி பொலிஸாருடன் இணைந்து நெடுங்கேணி நகரில் குறித்த பரிசோதனை நடவடிக்கை மேற்கொண்டனர். (4-5-299)

# இரவு வேளையில் வெட்டி கடத்தப்படும் பாரிய மரங்கள்

(நெளுக்குளம்)

வவுனியா - பனிச்சங்குளத்தின் குளகட்டில் இருந்த பாரிய மதுரை மரங்களை இரவோடு இரவாக வெட்டி சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வவுனியா கந்தபுரம் கிராம உத்தியோகத்தர்பிரிவிற்குட்பட்ட பனிச்சங்குளத்தின் குளக்கட்டில் இருந்த பாரிய



இரண்டு மதுரை மரங்களை இனந்தெரியாத நபர்கள் வெட்டி, அவற்றை துண்டாக்கி கொண்டு சென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் இதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த பகுதியிலுள்ள கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (4-5-299)

## மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் ஊரடங்கு வேளை மதுபானப் போத்தல் விற்பனை நடைபெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் மது பானம் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 24 மதுபானப் போத்தல்களும் மற்றும் 48பியர்ரின்களும் தருமபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (4-5-316)

# ஆனையிறவு பகுதியில் முச்சக்கரவண்டி விபத்து

(தருமபுரம்)

கிளிநொச்சிமாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனையிறவு பகுதியில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

பளையில் இருந்து கிளிநொச்சி நோக்கி குடும்பமாக முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்தவேளை திருத்த வேலைக்காக ஏ9 வீதி அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை அவதானிக்காததனால் வேக கட்டுப்பாட்டை இழந்து குறித்த முச்சக்கர வண்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவன் காலில் காயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)

## மன்னார் பிரதேச சபையின்

# புதிய தவிசாளர் தெரிவில் கலந்து கொள்ள ஊடகவியலாளர்கள், எம்.பிக்களுக்கு அனுமதி மறுப்பு

(மன்னார்)

மன்னார்பிரதேச சபையின் புதிய தவிசாளர்தெரிவு நேற்று புதன்கிழமை காலை உள்ளூராட்சிஆணையாளர் பற்றிக் நிறஞ்சன் தலைமையில் இடம் பெற்ற நிலையில்,குறித்த தவிசாளர் தெரிவில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதிமறுக்கப்பட்டது.



மேலும் புதிய தவிசாளர் தெரிவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும், காதர் மஸ்தான் ஆகியோரையும் கலந்து கொள்ள பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர்.-மன்னார் பிரதேச சபையை சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு,பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவில் கலந்து கொள்ளச் சென்ற மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் பொலிஸாரினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். மேலும் பிரதேச சபையின் பணியாளர்களும் சோதனையின் பின்னர் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.-வடமாகாண ஆளுநரால் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் தவிசாளர் மற்றும் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் நேற்று புதிய தவிசாளர் தெரிவு இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-285)

# சீனாவின் சேதனப் பசளையில் பாதிப்பை ஏற்படுத்தும் பக்றீரியா

## இரண்டாவது பரிசோதனையிலும் உறுதி

(கொழும்பு)

**சீனாவிலிருந்து கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த சேதனப் பசளை தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும் பக்றீரியா காணப்படுவதாக இரண்டாவது தடவை மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையிலும் உறுதியாகியுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை பெறப்பட்ட மாதிரிகள் மீண்டும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம், கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

அந்தப் பரிசோதனையில் குறித்த சேதனை பசளையில் பாதிப்பை ஏற்படுத்தும் பக்ரீரியா காணப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, குறித்த சேதனப் பசளை தொகையை நாட்டிற்கு கொண்டு வருவதை தவிர்க்குமாறு தாம் சிபார்சு செய்வதாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

# அழைத்தது ஆணைக்குழு; ஓடி ஒளிந்த லொகான்



(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி காண்பித்து முழந்தாளிட வைத்து மிரட்டிய சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் புனர்வாழ்வு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தவை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணைக்காக அழைந்திருந்தது.

எனினும் அவர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முன்னிலையாகவில்லை யெனத் தெரியவருகிறது. வேறொரு தினத்தில் தனக்கு அனுமதி அளிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் சிறைச்சாலைகள் புனர் வாழ்வு அமைச்சராக இருந்த லொகான் ரத்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மது போதையில் சென்று தமிழ் கைதிகளை முழந்தாளிட வைத்து தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டிய சம்பவம் அரசியலில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியிருந்தது.

அதன் பின்னர் அரசியல் அழுத்தங்கள் அதிகரிக்க சிறைச்சாலைகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)





# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

## ஐஸ்வர்யம் அருளும் ஔவையார் விரதம்



நான் விரதம் இருக்கப்போகிறேன். அதற்கு நெருப்பு வேண்டும் என்று அந்தப் பெண் கூற, அதற்கு அவை எங்களையும் விரதத்திற்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும்என வேண்டுகோள் விடுத்தன.

வரும் வழியில் புங்கஇலை, புளியமிலை ஆகியனவும் நோன்பு இருக்கும் போது எங்களையும் நினைத்துக்கொள்ளுங்கள்என்று சொல்லியது. அந்தப்பெண் வீடு திரும்பியதும்விரதம் இருந்தாள். அவளுக்கு விநாயகப் பெருமான் அருள் செய்தார்.

உடனே அவள்வீட்டில் செல்வம் பொங்கிவழிந்தது. அந்தப் பெண் கொழுக்கட்டைகளை ஆண்கள் கண்ணில் படாமல் சாப்பிட்டுப் பூஜைப் பொருட்களை தண்ணீரில் விட்டாள். அந்தப் பெண்ணுக்குத் திருமணமானது. நல்ல கணவர் கிடைத்தார்.

புகுந்த வீட்டிற்குப் போகும் போது அண்ணிகளிடம் ஔவையார் நோன்பு விரத மகிமையைச் சொல்லிச்சென்றாள். அவர்களும் விரதமிருக்க விநாயகர் அருளால் செல்வம்கிடைத்தது.

(தொடரும்)



# ‘சுவ தரணி’ மருந்துப்பொதி பிரதமரிடம் கையளிப்பு



(கொழும்பு)

பொதுமக்களை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படவுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான ‘சுவதரணி’ சுதேச (ஆயுர்வேத) மருந்துப் பொதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் வைத்து கையளிக்கப்பட்டது. (நி-5)

# பேக்கரி உணவு உற்பத்திகளில் வீழ்ச்சி

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

கோதுமை மா பற்றாக்குறை காரணமாக அதன் ஊடாக தயாரிக்கப்படும் உணவுப்பண்டாங்களின் உற்பத்தி குறைவடைந்துள்ளதாகஅகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக வெளியான தகவலினால் சில கம்பனிகள் மாவை பதுக்கி வைத்துள்ளதாக சங்கம் மேலும் குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் அரசாங்கத்தின் தலையீடு இன்றி விலை அதிகரிப்புக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் சில பகுதிகளில் உள்ள பேக்கரிகளின் உற்பத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# 780,000 ரூபாய் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

கொழும்பு 12 - பழைய சோனக தெருவில் உள்ள வீடொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 12 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 43 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி சுமார் 7 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைக்காக, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சிகரெட்டுகளுடன் வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# கைக்குண்டு மீட்பு விவகாரம் திருமலை நபரும் கைது

(கொழும்பு)

கொழும்பு, நாரஹேன்பிட்டி தனியார்வைத்தியசாலை வளாகத்திலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - உப்புவெளி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையின் மலசலகூடத்திலிருந்து கடந்த 14ஆம் திகதி கைக்குண்டொன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து திருகோணமலை உப்புவெளி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். (நி-5)

# சிறுவர்களுக்கான தடுப்பூசி குறித்து முறைப்பாடுகள் இதுவரை பதிவாகவில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையில் இதுவரை 500 சிறுவர்களுக்கு தடுப்பூசிவழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பின் சிறுவர்களுக்கு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டதாக இதுவரை முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதையடுத்து, 12 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட நாட்பட்ட நோயாளர்களான சிறுவர்களுக்கு பைசர் தடுப்புசி வழாங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் விரிவுபடுத்தவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த வகையில், நாடு முழுவதும் நாட்பட்ட நோயாளர்களான சிறுவர்களுக்கு தடுப்புசி வழங்கும் நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகள் மூலம் முன்னெடுக்கப்படும் என்று சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் சுரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.(நி-5)

# முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கத் தயார்

## தயாசிறி பகிரங்க அறிவிப்பு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிகேட்டுக்கொண்டால் மீண்டும் ஒருதடவை வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கத் தயார் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தயாசிறி ஜய சேகர பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமயத்தில் தான் கடந்த முறை எம்.பி. பதவியை இராஜினாமா செய்து விட்டு வடமேல் மாகாண முதலமைச்சராக போட்டியிட்டுத் தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இரு பிள்ளைகளின் தந்தை ஆற்றில் பரிதாப மரணம்

(கொழும்பு)

மகாவலி கங்கையில் கட்டுமரத்தைக் கட்டுவதற்காகச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை, நீரில் அடித்துச் செல்லப்பட்டு பரிதாபமாக மரணமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டி, மெதகஹவதுர பிரதேசத்தைச் சேர்ந்த கே.ஜி.திஸ்ஸ (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மெதகஹவதுர பிரதேசத்தில் மஹாவலிகங்கையைக் கடப்பதற்கான பாலமானது உடைந்து விழுந்துள்ளதால், பிரதேச மக்கள் கங்கையைக் கடப்பதற்கு கட்டு மரத்தையே பயன்படுத்திவந்துள்ளனர்.

இந்நிலையில், நாவலப்பிட்டியில் நீடித்து வரும் சீரற்ற காலநிலை காரணமாக கட்டுமரத்தைக் கயிற்றால் கட்டுவதற்குச் சென்றபோதே, குறித்த நபர் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டுள ளார்.

ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் ஒன்றறைக் கிலோ மீற்றர் தொலைவில் குறித்த நபரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 400 கொள்கலன்கள் விடுவிப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 800 கொள்கலன்களில் 400 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. டொலர் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக குறித்த கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குருதியின் வகைகள்!

எல்லோர் உடம்பிலேயும் ஒரே இரத்தம் தான். இருந்தாலும் இந்த இரத்தத்திலே பல வகையுண்டு. இது இன்றைக்குப் பலபேருக்குத் தெரிந்த ஒரு செய்தி. இரத்தத்திலே பல வகை யுண்டு என்பதை முதலிலே கண்டு பிடித்தது யார் தெரியுமா?

1890 களில் கார்ல் லாண்ட் ஸ்டீனர் (Karl Land Steiner) என்ற ஆஸ்திரிய நோயறி நிபுணர் (Pathologist) தான் அதைக் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்னர் சரியாக விபரம் தெரியாமல் ஒரு மனித னுடைய இரத்தத்தை எடுத்து இன்னொரு மனிதனுக்குச் செலுத்தும் போது ஆபத்து ஏற்பட்டிருக்கு. இதன் காரணமாக சில நாடுகளிலே இப்படி இரத்தம் செலுத்துவதை தடை செய்யக் கூடிய சட்டம் எல்லாம் இயற்றியிருக்கின்றார்கள். பழங்காலத்திலேயெல்லாம் மருத்துவர்கள் இரத்த இழப் பினால் வலுக் குறைந்தவர்களுக்கு விலங்குகளின் இரத் தத்தைக் கூட செலுத்திப் பார்த்திருக்கின்றார்கள். அதனால் ஆபத்துத் தான் ஏற்பட்டுவிட்டது.

கார்ல் லாண்ட் ஸ்டீனர் என்ற இந்த நிபுணர் இரத்த வகை களைக் கண்டு பிடிக்கின்ற வரைக்கும் சிக்கல் தான். இவர் இன்னும் பல உண்மைகளையும் கண்டு பிடித்தார்.

ஒரு வகை இரத்தத்தை இன்னொரு வகை இரத்தத்துடன் கலக்க விட்டால் பல சமயம் இடைஞ்சல் வந்து விடுகின்றது. ஒரு மனிதருடைய இரத்தத்தை வேறு ஒரு மனிதரின் இரத்த த்திலிருந்து எடுக்கப்பட்ட சீரத்துடன் கலந்தால் முதல் இரத்த த்தில் உள்ள சிவப்பணுக்கள் ஒன்றுகூடி கட்டி கட்டியாக ஆகிவிடுகின்றது. இதையும் அவர் தான் கண்டு பிடித்தார்.

உடம்புக்குள்ளே இது மாதிரி நடந்தால் இரத்தம் செலுத்தப்பட்டவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். ஆனாலும் சில வகை இரத்தங்களை ஒன்றோடு ஒன்று கலந்தால் இது மாதிரி ஆவதில்லை என்பதையும் அவர் கண்டு பிடித்தார்.

1902 இலே தான் அவர் மனித இரத்தத்திலே A, B, AB, O இப்படி நான்கு வகை இருக்கிறதைக் கண்டு பிடித்து வெளி யிட்டார். ஒவ்வொரு மனித உடலிலேயும் இதிலே ஒரு வகை இரத்தம் இருக்கும்.

ஒரு வகை இரத்தத்தை அதே வகை இரத்தமுள்ள மனி தர்களின் உடம்பிலே செலுத்தினால் கெடுதல் ஏற்படாது. O வகை இரத்தத்தை எல்லா வகை இரத்தம் உள்ளவர்களுக்கும் செலுத்தலாம். A அல்லது B வகை இரத்தத்தை AB வகை இரத்தமுள்ளவர்களுக்குச் செலுத்தலாம்.

ஆனால் AB வகை இரத்தத்தை A வகை அல்லது B வகை இரத்தம் உள்ளவர்களுக்குச் செலுத்தக் கூடாது. O வகை இரத்தம் உடையவர்களுக்கு ஏனைய இரத்தங்களைச் செலுத்தக் கூடாது. AB ஆகிய வகை இரத்தங்களையும் கலக்கக் கூடாது.

இந்தக் கண்டு பிடிப்புக்காக லாண்ட் ஸ்டீனருக்கு 1930 இல் மருத்துவம் மற்றும் உடல் செயல் இயலுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இன்றைக்கு அறுவை சிகிச்சைகள் எல்லாம் சர்வசாதாரணமாக நடக்கிறதற்கு. அந்த டாக்டரின் கண்டு பிடிப்பு எவ்வளவு உதவியாக இருக்கின்றது. ஒரு அறுவை சிகிச்சை தியேட்டர் உள்ளே ஒரு அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கு.

அந்த அறுவைச்சிகிச்சை தியேட்டர் வாசலில் இரண்டு பெண்கள். மிகவும் பதற்றத்துடன் உட்கார்ந்திருக்கின்றார்கள். ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்துக் கேட்டார்...நீ ஏம்மா இப்படி பதற்றத்துடன் உட்கார்ந்திருக்கின்றாய் என்று.

அதற்கு அந்தப் பெண் சொன்னார்...உள்ளே அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போனவர் என் வீட்டுக்காரர். இது வரைக்கும் அவருக்கு எந்த நோயும் வந்ததில்லை. இதுதான் முதல் அறுவைச் சிகிச்சை. அது நல்லபடியாக முடியவில்லை என்றால் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கு என்றார் அந்தப் பெண்.

இந்த அறுவைச்சிகிச்சை நல்லபடியாக முடியவில்லை என்றால் என்னுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்று தான் நானும் பயந்து கொண்டிருக்கின்றேன் என்றார் மற்றப் பெண். நீ யாரு? என்று கேட்டார் முதல் பெண்ஃ

உள்ளே அறுவைச் சிகிச்சை செய்யப் போகின்ற டாக்டர் என் வீட்டுக்காரர். அவருக்கும் இதுதான் முதல் அறுவைச் சிகி ச்சை என்றார் அந்தப் பெண்.



# சிறுவர் அரங்கம்

## யமுனை நதி அழுவது ஏன்?



அக்பர்தமது மனைவியுடன் யமுனை நதிக்கரையில் அமர்ந்து யமுனையின் அழகினை ரசித்துக் கொண்டிருந்தார்.

பேகம் யமுனை நதியின் நீரோட்டத்தின் சலசலப்பு உன்னை அழகி அழகி என்று கூறிக்கொண்டே செல்வது போல் தோன்றுகிறது இல்லையா பேகம் என்றார் கொஞ்சும் குரலில்.

ஆனால் அரசியாரோ அக்பர் கூறியதை மறுத்து உங்களுக்கு அப்படித் தோன்றுகிறது. யமுனை நதியின் சலசலப்பு ஒருபெண் அழுது கொண்டிருப்பது போல தனது கண்களுக்கு தெரிகிறது.

யமுனை அழுது கொண்டிருக்கிறது என்று தான் கூற வேண்டும் என்றார் அரசியார். அக்பருக்கோ அதிர்ச்சியாக இருந்தது.

ஏன் பேகம் உன் அழகைக் கண்டு பொறாமைப்பட்டு அழுது கொண்டிருக்கிறதோ? என்றார் அரசர். அரசியாரின் முகம் வெட்கத்தால் சிவந்துபோனது.

அடுத்த நாள் அரச சபை கூடியதும் அமைச்சர்களிடம் தமது சந்தேகத்தைக் கேட்டார். யமுனை அழுது கொண்டிருப்பது போல் தோன்றுவதற்கு என்ன காரணம்? யாருக்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பீர்பால் சபையில் மௌனமாக அமர்ந்திருந்தார். என்ன பீர்பால் நீங்கள் கூறுங்கள் யமுனை ஏன் அழுது கொண்டிருக்கிறது? என்றார் அக்பர்.

தமது வழக்கமான புன்சிரிப்புடன் தமது இருக்கையை விட்டு எழுந்தார் பீர்பால். அரசே இமயமலை தான் யமுனையின் தாயகம் வங்கக்கடல் யமுனையின் புகுந்த வீடு எனக் கூறலாம். பிறந்த இடத்தை விட்டு பிரிந்து புகுந்த இடமான வங்கக் கடலை நோக்கி போக வேண்டியுள்ளதே என வேதனைப்பட்டு அழுது கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன் என்றார் பீர்பால்.

தனது கேள்விக்கு சரியான விளக்கத்தை அளித்த பீர்பாலை மனமுவந்து பாராட்டினார் அக்பர்.

சபையில் இருந்த அனைவரும் பீர்பாலின் சாதுர்யமான பேச்சை கேட்டு ரசித்து தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினார்கள்.

# மகாபாரதம்




பெரிய லாபத்தில் மகிழ்ச்சியும், பெரிய நட்டத்தில் வருத்தமும் கொள்ளாமல் இருப்பது அடக்கம் உடையவன் இயல்பாகும். அடக்கம் உடையவனால் எளிதில் சாத்திர ஞானம் பெறமுடியும்.

ஞானவானிடம் பொறுமை, சத்தியம், கொடைத்தன்மை ஆகியவை வந்து அமையும்.

மிகு காமம், சினம், தற்புகழ்ச்சி, பொய் ஆகியவை கெட்ட புத்தியுள்ளவரிடம் நிரந்தரமாகக் குடியிருக்கும்.

அடக்கம் உடையவன் இவற்றைத் தன்னிடம் நெருங்க விடமாட்டான். அடக்கம் உடையவன் பூமிக்கு அணிகலன் ஆவான். அவனிடம் இருந்து எல்லா நற்குணங்களும் ஒளிவீசும்.

**முதுமை, இறப்புகளைத் தடுப்பது எப்படி?**

முதுமை, இறப்புகளைத் தடுப்பது எப்படி? என தருமர் வினவ பீஷ்மர் சொல்கிறார்

இத்தகைய வினாவை ஜனகர், பஞ்சசிகர் என்னும் முனிவரிடம் ஒரு சமயம் வினவினார். அதற்கு அம்முனிவர் "மூப்பையும், மரணத்தையும் யாராலும் தடுக்க இயலாது.

எந்த உயிரினமும் இவற்றிலிருந்து தப்ப முடியாது. சென்ற பகல்களும், இரவுகளும், வாரங்களும், மாதங்களும், ஆண்டுகளும் திரும்பி வருவதில்லை.

நிலையில்லாத காலம் எல்லாவற்றையும் நிலையில்லாததாகச் செய்து விடுகிறது. உயிரினங்கள் வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்படுவது போலக் காலமானது எல்லாவற்றையும் அழித்து விடுகிறது.

கல்லும், மண்ணும், மரமும் கூடக் காலப் போக்கில் தம் தன்மையை இழந்து விடுகின்றன. காலமாகிய வெள்ளத்திலிருந்து யாரும் தப்பிக் கரையேற முடியாது. அழிவைச் சந்தித்தே ஆக வேண்டும்.

மனைவியோடும், மக்களோடும், உறவினரோடும் உண்டான தொடர்பு ஏதோ வழிப் போக்கரிடம் ஏற்படும் தொடர்பு போன்றது. இத்தொடர்பு பிறவிதோறும் இதே உறவு முறைகளோடு தொடர்வதில்லை. (தொடரும்)

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்!
– நானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடையாள அட்டைக்கு அலையும் சிவாச்சாரியப் பெருமக்களே!

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு மரத்தின் கீழ் தியானத்தில் அமர்ந்திருக்கின்றார். மரங்கள் அடர்ந்திருக்கக்கூடிய அவ்விடத்து வழியாக ஒருவர் மூச்சு வாங்க ஓடி வருகிறார். அவரைக் குரங்குகள் துரத்தி வருகின்றன.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அருகில் அந்த நபர் இழைத்தபடி நிற்க, எதற்காக ஓடுகின்றீர் என சுவாமி வினவுகிறார்.

சுவாமி, அதோ! குரங்குக் கூட்டம் என்னைத் துரத்தி வருகிறது. அதனால் ஓடுகின்றேன் என்கிறார் அந்த நபர்.

குரங்குகள் உன்னைத் துரத்துகின்றன. நீவிரோ அவற்றிலிருந்து தப்பிக்க ஓடுகிறீர். தாங்கள் ஓடுவதால் குரங்குகள் துரத்துவதை நிறுத்தி விட்டனவா என்ன? என்று மறு வினாத் தொடுக்கின்றார் பரமஹம்சர்.

இல்லை சுவாமி என்பது அந்த நபரின் பதிலாக அமைகிறது.

தாங்கள் ஓடுகின்றபோதும் குரங்குகள் துரத்துவதை நிறுத்தாவிட்டால் ஏன் ஓட வேண்டும். இவ்வாறு கேட்கிறார் இராமகிருஷ்ணர்.

அப்படியானால் நான் என்ன செய்வது சுவாமி.

ஓடுவதை நிறுத்தி; உன் தோள்புயங்களை உயர்த்தி, கண்களை விளித்து, குரங்குகளை நோக்கி முறைத்துப்பார் என்கிறார் சுவாமி.

அவ்வாறே அந்த நபர் செய்கிறார். என்ன ஆச்சரியம் குரங்குகள் துரத்தி வந்த வேகத்தில் திரும்பி ஓடுகின்றன.

ஆக, இக்கதையினூடாக நாம் கற்றறிவது பயந்து வாழ்வது பயத்தை மென்மேலும் கூட்டும். பயப்படுத்துபவர்களை மென்மேலும் உசார்ப்படுத்தும்.

ஆகையால், துணிந்து வாழ வேண்டும். அந்தத் துணிவு சுயபாதுகாப்பையும் சுயகௌரவத்தையும் தானாகத் தந்தருளும்.

இந்தக் கருத்துரைப்போடு எங்கள் சிவாச்சாரியப் பெருமக்களின் பக்கம் நோக்குகின்றோம்.

கொரோனாக் காலத்தில் ஆலயங்களில் நித்திய பூசைக்குச் செல்வதற்காக சிவாச்சாரியர்கள் இந்து கலாசார திணைக்களத்தின் அடையாள அட்டைக்காக ஓடித் திரிகின்றனர்.

அடையாள அட்டை இல்லையென்றால் சிவாச்சாரியர் ஆலய கடமையைச் செய்ய முடியாது.

அந்தோ! இப்படியொரு அவலத்தில் நம் சிவாச்சாரியப் பெருமக்களின் காலம் கடந்து போகிறது.

ஆம், பௌத்த துறவிக்கு காவியுடை அடையாளம். கத்தோலிக்க பாதிரியாருக்கு அவரின் கோல உடை இனம் காட்டும் குறியீடு.

ஆனால் சிவாச்சாரியர்களுக்கு அடையாள அட்டை தேவையாம்.

சிவாச்சாரியப் பெருமக்களே! இந்து கலாசார திணைக்களம் தந்த அத்தனை அடையாள அட்டைகளையும் தீயில் போடுங்கள்.

நாங்கள் சிவாச்சாரியர்கள். முடிந்தால் பௌத்த, கத்தோலிக்க மதகுருமார்போல் எங்களுக்கும் மதிப்புத் தாருங்கள்.

இல்லையேல் ஆலயங்கள் பூட்டிக் கிடக்கட்டும். அதனால் ஆட்சியாளர்களுக்கு அவலம் ஏற்படட்டும் என்று அறிவியுங்கள்.

சமய வரிசையில் எங்களுக்குரிய இடத்தை வழங்குங்கள். இல்லையேல் அந்த இடத்தில் எங்கள் ஆசியுரைக்கு இடமில்லை என்று கர்ச்சியுங்கள்.

உங்களுக்கான மரியாதை தானாக வந்து சேரும் பாருங்கள்.

### வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்

## ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

(வவுனியா)

நிரந்தர நியமனம் கோரி ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினரால் வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காலத்தை வீணடிக்காதே, நிரந்தர நியமனத்தை உடன் வழங்கு, கதைத்தது காணும் உறுதி மொழியை நிறைவேற்று, ரூபா 20,000 வாழ்க்கை செலவுக்கு போதுமா? என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது கருத்து தெரிவிக்கையில்,

பட்டதாரிகளிற்கு ஒரு வருட பயிற்சிக்காலம் நிறைவடைந்தும் அரசாங்கம் சரியான நியமனத்தை வழங்கவில்லை. செப்ரெம்பர் 3ஆம் திகதி ஒருவருட பயிற்சிக்காலம் முடிவடைந்த பின்பும் எமக்கான நியமனம் வழங்கப்படாமல் இருப்பது என்பது வேதனைக்குரிய விடயமாகும். அது மாத்திரமின்றி எங்களது பட்டதாரி பயிலுனர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் சமுர்த்தி போன்றவற்றிற்கு வாரத்தில் 7 நாட்களும் எதுவித மேலதிக கொடுப்பனவுகள் இன்றி அழைக்கப்படுகின்றனர். இது ஒரு பாரிய குறைபாடாக இருக்கின்றது.

தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமையில் ஒரு குடும்பம் 20,000 ரூபாயை கொண்டு எவ்வாறு குடும்பம் நடத்த முடியும். இந்நிலையில் தற்போதைய வேடிக்கையான அரசாங்கம் எங்களின் பயிற்சிக் காலத்தை 20,000 ரூபாய்கொடுப்பனவுடன் மேலும் 6 மாதங்கள் நீடித்திருப்பதானது எங்களது வாழ்க்கையில் மேலும் கஷ்டத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

பல்வேறு போராட்டங்களின் ஊடாக கிடைக்கப்பெற்ற இந்த நியமனத்தை ஒரு வரப் பிரசாதமாக நினைத்துக் கொண்டு இருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம் எங்களை கஷ்டத்துக்குள்ளாக்கி போராட்டங்களை தொடருவதற்கு தள்ளியுள்ளது.

எனவே இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப செப்ரெம்பர் 3ஆம் திகதி என்றதன் அடிப்படையில் எங்களிற்கான பயிற்சி நியமனத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தனர். (ம)

### தடுப்பூசி பெற்றவர்களுடன்

## திருமண வைபவங்களை நடத்துவதற்கு இணக்கம்

(கொழும்பு)

திருமண வைபவங்களை மதுபான உபசாரமின்றி நடத்தவும் பூரணமாகத் தடுப்பூசிகளைப் பெற்றவர்களை மாத்திரம் திருமண வைபவங்களில் அனுமதியளிக்கும் வகையிலும் சுகாதார வழிகாட்டல் ஒன்றை தயாரிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு திருமண சேவை வழங்குநர் சங்கம் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது, தற்போதைய சட்டக்கட்டுப்பாடுகளின்கீழ் மீண்டும் திருமண வைபவங்களை நடத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

கோவிட் சுகாதார வழிகாட்டலின் கீழ், அனுமதி வழங்கப்படக்கூடிய குறைந்தபட்ச எண்ணிக்கையிலான விருந்தினர்களைக் கொண்டு திருமண வைபவங்களை நடத்த இருதரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

கோவிட் தொற்று பரவல் நிலை காரணமாகக் கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு திருமண சேவை வழங்குநர் சங்கத்தினால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

### குளவி கொட்டியதில்

## 4 பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் மாவட்டம், முந்தளம் பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார்.

கந்ததோடுவாவ கிராமத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாய் (வயது -57) புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று முந்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னை மரத்தில் குளவிகள் கூடு கட்டியிருந்த நிலையில், கடுங்காற்றுக் காரணமாக குளவிக்கூடு உடைந்து கீழே விழுந்துள்ளது.


இதன்போது பெரும் எண்ணிக்கையிலான குளவிகள் கலைந்து வந்து குறித்த பெண்ணைக்கொட்டியுள்ளன.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (ம)

### மருத்துவக் குறிப்பு

கொய்யாப்பழம் சாப்பிட்டு வர இரத்தச்சோகை குணமாகும். பற்களும் பலப்படும். வெங்காயத்தை உப்பில் தொட்டு சாப்பிட இரத்த வாந்தி தீரும்

## சத்திய தரிசனம்



## பிரமாண்ட லிங்கம்

- உங்களையெல்லாம் யார் இங்கு அழைத்தார்கள்? ஒரு சிறிய அச்சடித்த அழைப்பிதழ்கூட கிடையாது. ஆனாலும் நீங்கள் ஆயிரக்கணக்கில் வந்திருக்கிறீர்கள். உங்களை என்னோடு பிணைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.
- நான் பந்தமற்றவன், எந்தப் பணிக்காக நான் வந்திருக்கிறேனோ அதில் மட்டுமே நான் பற்றுக்கொண்டுள்ளேன்.ஆனால் ஒரு விடயம் நிச்சயம். நீங்கள் என்னிடம் வந்தாலும் வராவிட்டாலும் நீங்கள் யாவரும் என்னவர்களே.

இந்தச் சிவமாதா, இந்தச் சாய்மாதா, ஆயிரம் அன்னையரின் அன்பைத் தனது மக்கள் மீது கொண்டிருக்கிறாள். அதனால்தான் நான் உங்களை இவ்வளவு கொஞ்சுகிறேன், பாதுகாக்கிறேன். நான் கோபப்படுவதாகத் தோன்றினாலும் அது என் அன்பின் வேறொரு வடிவமே என்பதை நினைவில் வையுங்கள். (தொடரும்)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

06

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்






துராந்த் கோடு Durand Line -AB

பாகிஸ்தானின் மேற்கில்உள்ள துராந்து எல்லைக் கோட்டை ஆப்கானிய அரசு இன்றளவிலும் அங்கீரிக்கவில்லை.

இந்தியாவிற்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான எல்லை மிகக்குறைவு. தற்போது இந்த எல்லை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே உள்ளது. 1947 ஆம் ஆண்டில், சுதந்திரத்திற்குப்பிறகு பாகிஸ்தான் உள்ளூர் பழங்குடியினரின் உதவியுடன் ஜம்மு-காஷ் மீர என்ற சுதேச அரசை ஆக்கிரமித்து அதன் சில பகுதிகளை ஆக்கிரமித்தது. இந்த விவகாரம் UNOக்கு பரிந்துரைக்கப்பட்டதால் இந்தியா ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியை திரும்பப் பெறவில்லை.

ஆகவே, இந்தியாவுக்குச் சொந்தமான ஜம்மு-காஷ்மீரின் இந்த பகுதி இன்னும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ளது, இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் என்று அழைக்கப்படுகிறது.

## அரசர் அமனுல் லாகானின் ஆட்சி (1919-1929)

ஆப்கானிஸ்தான் வரலாற்றில் மன்னர் அமானுல்லாகான் நினைவு கூரத்தக்கவர். ஆங்கிலேய காலனியில் இருந்த ஆப்கானிஸ்தான், மன்னர் அமானுல்லா வருகைக்குப் பின் புத்தெழுச்சிபெற்றது. 1919 ஆம் ஆண்டு முதல் 1929 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானை ஆண்டு வந்தார் அமானுல்லா. 19.08.1919 அன்று ஆப்கானிஸ்தான் சுதந்திர நாடாகப் பிரகடனமானது.


பெண் கல்வி குறித்து உரக்கக் குரல் எழுப்பினார். மேலும், இஸ்லாமிய பெண்கள் "பர்தா" அணிய வேண்டிய கட்டாயம் இல்லை என அப்போதே முற்போக்காகப் பேசினார். இச் சீர்திருத்தங்கள் பல பழங்குடி மற்றும் மதத் தலைவர்களை விரைவாக அந்நியப்படுத்தியது, இது ஆப்கானிய உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது (1928-1929) பெரும் ஆயுத எதிர்ப்பை எதிர்கொண்டு, அமானுல்லாகான் ஜனவரி1929 இல் பதவி விலகினார்.

ஆப்கானிஸ்தான் வரலாற்றில் பெயர் பெற்ற மன்னர் அமானுல்லாகான் 1919 ஆம் ஆண்டு முதல் 1929 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானை ஆண்டு வந்தார் அமானுல்லா. 1919 அன்று ஆப்கானிஸ்தான் சுதந்திர நாடாகப் பிரகடனமானது. பெண் கல்வி குறித்து உரக்கக்குரல் எழுப்பினார். மேலும், இஸ்லாமிய பெண்கள் "பர்தா" அணிய வேண்டிய கட்டாயம் இல்லை என அப்போதே முற்போக்காகப் பேசினார். இது ஆப்கானிய உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது பெரும் ஆயுத எதிர்ப்பை எதிர்கொண்ட அமானுல்லாகான் ஜனவரி1929 இல் பதவிவிலகினார்.

காபூல் ஹபிபுல்லாகலகனி தலைமையிலான சாகா விஸ்ட் படைகளுக்கு அடிபணிந்தது. காபூல் ஹபிபுல்லாகலகனி 1929 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை ஆட்சி செய்தார். அமானுல்லாவின் உறவினர் இளவரசர் முகமது நாதிர்ஷா, ஒக்டோபர் 1929 இல் கலகனியை தோற்கடித்து கொன்றார், மேலும் அவர் மன்னர் நாதிர்ஷாவாக அறிவிக்கப்பட்டார். நவீன மயமாக்கலுக்கான படிப்படியான அணுகு முறைக்கு ஆதரவாக அவர் அமானுல்லா கானின் சீர்திருத்தங்களை கைவிட்டார், ஆனால் 1933 ஆம் ஆண்டில் அமானுல்லா விசுவாசியான பதினைந்து வயது ஹசாரா மாணவரான அப்துல் கலிக்கால் படுகொலை செய்யப்பட்டார்.



மன்னர் அமானுல்லா கான்
1919-1929



ஹபிபுல்லா கலகனி
ஜனவரி-ஒக்டோபர் 1929
ஆப்கானை ஆட்சிபுரிந்தவர்

மன்னர் அமானுல்லாகானைத் தொடர்ந்து ஹபிபுல்லாகலகனி 1929 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை ஆட்சிசெய்தார். இளவரசர் முகமது நாதிர்ஷா, ஒக்டோபர் 1929 இல்கலகனியை தோற்கடித்து கொன்றதோடு அவர் மன்னர் நாதிர்ஷாவாக அறிவிக்கப்பட்டார். அவர் அமானுல்லா கானின் சீர்திருத்தங்களை கைவிட்டார். அதனால் 1933 ஆம் ஆண்டில் அமானுல்லா விசுவாசியான பதினைந்து வயது ஹசாரா மாணவரான அப்துல் கலிக்கால் படுகொலை செய்யப்பட்டார். பிறகு, நாதிர்கானின் மகன் சாகிர்ஷா அரியணை ஏறினார்.

பிறகு, நாதிர்கானின் மகன் சாகிர்ஷா அரியணை ஏறினார். 1933 தொடங்கி 1973 வரை ஆட்சி செய்தார். சுமார் 40 ஆண்டுகாலம், ஆப்கானுக்கு நிலையான ஆட்சியைத் தந்தவர் எனும் பெருமை இவரையே சேரும். (ஆப்கானிஸ்தான் என்பது ஆப்கன், ஆப்கானிந்தான் எனவும் அழைக்கப்படுவதுண்டு)


## சாகிர்ஷாவின்ஆட்சி (1933-1973)

ஆப்கானிஸ்தானின் நீண்ட உறுதியான காலப்பகுதி என்றால் அது 1933 தொடக்கம் 1973 வரையான அரசர் சாகிர்ஷாவின் ஆட்சிக்காலமாகும். 1946 வரை, சாஹிர்ஷா தனது மாமாவின் உதவியுடன் ஆட்சி செய்தார், அவரது மாமா பிரதமர் பதவியை வகித்தார். அரசர் நாதிர்ஷாவின் கொள்கைகளைத் தொடர்ந்தார்.


அதன் பின் சாஹிர்ஷாவின் மாமாக்களில் ருவரானஷாமஹ் முத் கான் 1946 இல் பிரதமரானார் மற்றும் அதிக அரசியல் சுதந்திரத்தை அனுமதிக்கும் ஒரு பரிசோதனையை ஆரம்பித்தார், ஆனால் அவர் எதிர்பார்த்ததைவிட மேலும் சென்றபோது கொள்கையை மாற்றினார்.

ஷாமஹ்முத்கான் 1953 வரை பிரதம மந்திரியாக இருந்தார். அவருக்குப் பதிலாக 1953 ஆம் ஆண்டில் அரசரின் உறவினர் மற்றும் மைத்துனரான முகமது தாவுத்கான் பிரதமர் பதவியேற்றார்.

1963 வரை பதவியில் இருந்த பத்து ஆண்டுகளில், தாவுத்கான் சமூக நவீனமயமாக்கல் சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்தார் மற்றும் சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவை நாடினார். அதன் பிறகு, 1964 அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது, முதல் அரசரல்லாத பிரதமர் பதவியேற்றார்.



மன்னர் முகமது நாதிர் ஷா
1929-1933



மன்னர் சாகிர் ஷா
1933-1973

(தொடரும்...)

## 61 பேர்...

கொரோனா மரணங்கள் பதிவானதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட 47 பேர் மற்றும் 30 முதல் 59 வயது வரையான 14 பேர் என 25 ஆண்களும் 36 பெண்களும் உயிரிழந்தவர்களில் அடங்குகின்றனர்.

இவர்களுடன் இலங்கையில் கொரோனாவுக்குப் பலியானோர் மொத்த எண்ணிக்கை 12,847 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 3ஆவது தடுப்பூசி...

பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன வெளியிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டோர், சிறுநீரக கோளாறு, புற்று நோய் போன்ற பாரதூரமான நோய்களைக் கொண்டுள்ள 30 - 60 வயதுக்கு உட்பட்டோருக்கு இவ்வாறு மூன்றாவது தடுப்பூசி செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் ஆகியோருக்கும் இவ்வாறு "பைஸர்" தடுப்பூசியை செயலூட்டியாக செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மன்னார் தவி...

நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரால், மன்னார் பிரதேச சபை தவிசாளர் பதவி மற்றும் அவரது உறுப்புரிமை நீக்கப்பட்டு, கடந்த 13ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி, தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிரினால் நேற்று முன்தினம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுவை நேற்று ஆராய்ந்த சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகிய நீதிபதிகள் குழாம், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த மனு தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும்வரை, இந்த உத்தரவு செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் முஜாஹிர் சார்பில் சட்டத்தரணிகளான என்.எம்.ஷஹீட், ருஷ்தி ஹபீப் உள்ளிட்ட குழாமினர் வாதங்களை முன்வைத்திருந்தனர்.

மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நேற்று இடம்பெறவிருந்த நிலையிலேயே, இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

## முல்லை. அரசாங்...

னாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் கொரோனாத் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-281)

## +941...

பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள்அனைவரும்புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 516,465 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 456,857 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12,847 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பாடசாலைகளை...

அதன்படி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி முதல் தென் மாகாண பாடசாலைகளை மீள ஆரம்பிக்க மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகள், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (ம)

## ஊரடங்குச்...

மையத்தின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனை அறிவித்துள்ளார்.

அத்துடன் புதிய கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டல்கள் விரைவாக அறிவிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஒரு சில கட்டுப்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ள அவர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இது தொடர்பான கட்டுப்பாடுகள் அறிவிக்கப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோவிட்-19 பரவலின் 3ஆம் அலையின் உக்கிரத்தை அடுத்து, கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி முதல் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆலை உரிமை...

ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டவுடன் ஒரு கிலோகிராம் அரிசி 100 ரூபாயுக்கும் குறைவான விலையில் விற்பனை செய்யப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரிசி வகைகளுக்கான புதிய விற்பனை விலைகளை அரிசி உற்பத்தி உரிமையாளர்கள் அறிவித்துள்ளமை குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நெல்லுக்கான நிர்ணய விலை 55 ரூபாயாக அதிகரித்தும் விவசாயிகள் அதனை ஏற்க மறுத்தனர். இதன் காரணமாகவே அரிசி இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளது.

சந்தையில் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் ஒரு சிலர் விவசாயிகளை இணைத்துக் கொண்டு முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள்.

துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் தற்போது கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றன.

இவ்வாரத்திற்குள் அனைத்து கொள்கலன்களும் விடுவிக்கப்படும். இதனை தொடர்ந்து ஒரு சில அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார். (ம)

## அரிசியின்...

தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் மாத்திரமே அதனை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும் அதற்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

எவ்வாறிருப்பினும், நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்திய வர்த்தகர் டட்லி சிறிசேன, அரிசி ஆலை உரிமையாளர்கள், எதிர்காலத்தில் அரிசி மற்றும் நெல் விற்பனை செய்வதற்கான புதிய விலைகளை அறிவித்தார்.

ஒரு கிலோகிராம் நாடு நெல்லை 62 ரூபாய் 50 சதத்திற்கும் ஒரு கிலோகிராம் சம்பா நெல்லை 70 ரூபாயுக்கும் ஒரு கிலோகிராம் கீரிசம்பா நெல்லை 80 ரூபாயுக்கும் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக டட்லி சிறிசேன தெரிவித்தார்.

அதேநேரம், சந்தையில் ஒரு கிலோகிராம் நாடு அரிசியை 115 ரூபாயுக்கும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை 140 ரூபாயுக்கும் ஒரு கிலோகிராம் கீரி சம்பா அரிசியை 165 ரூபாயுக்கும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குறித்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பில், பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களில் ஒருவரான டட்லி சிறிசேன, நாட்டின் அரிசி விலையைத் தீர்மானித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நெல்லின் விலையைத் தீர்மானிக்க முடியாது.

டட்லி சிறிசேனவுக்கு அதனைத் தீர்மானிக்க முடியாது. அரசாங்கமே அதனைத் தீர்மானிக்கும்.

விவசாயிகளுக்கு உத்தரவாத விலையை வழங்குவது தொடர்பில் தங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இவ்வாறு கூறினாலும் வர்த்தகர் டட்லி சிறிசேன நேற்று அறிவித்த விலைகளுக்கு அமையவே, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அரிசி விற்பனை செய்யப்பட்டதாக சில வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சந்தையில் தற்போது தேவைக்கு மேலதிகமாக அரிசி உள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரிசி வகைகளுக்காக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக போதுமான அளவு அரிசி சந்தைக்கு கிடைக்கப் பெறுவதாக மொத்த வியாபாரிகள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

## வடக்கில் 680...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கல்வி அமைச்சுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையே இடம்பெற்ற கூட்டத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகள் உள்ளன. அவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து பயணிக்கும் ஆசிரியர்களுக்கு வசதியாக சிறப்பு பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சரிடம் என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய போக்குவரத்து அமைச்சருடன் பேசி அதற்கான அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறையின் கீழ் தமது பயணத்தை முன்னெடுக்க முடியும்.

மேலும் ஆசிரியர்களுக்கு அவசர சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க பயிற்சியளிக்க மாகாண சபையின் நிதியில் சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்க என்னால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார உபகரணங்களை பெற்று ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வழங்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன்.

எனவே அனைத்து ஒழுங்குகளும் முடிவடையும் நிலையில் ஆரம்ப பாடசாலைகள் திடீர் அறிவிப்புடன் ஆரம்பிக்கப்படும் என்றார். (ம-33)

## கிளிநொச்சியில்...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் இருவரின் மாதிரிகள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஊடாகவும் ஒருவரின் மாதிரி யாழ்.போதனா வைத்தியசாலை ஊடாகவும் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்தன. (ம)

## தமிழ்த் தேசிய...

களாரும் திருமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி. கி.நோயல் இம்மானுவேலும் இணைந்து முன்னெடுத்திருப்பது, போரின் நேரடித் தாக்கங்களால் கல்வி, கலை, கலாசார, மொழி, நில, இன அடையாள ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டு, வலி தாங்கி நிற்கும் தமிழினத்தின் ஆழ்மனக் காயங்களுக்கு அருமருந்தாய் அமைந்துள்ளது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"ஈழத் தமிழ்த் தேசிய இனம் சருகாக நெரிபட்டு, சிதிலம் சிதிலமாக சிதறுண்டு போய், நிர்க்கதியற்று அந்தரித்து நிற்க வேண்டுமென்றும் எமது வாழ்வியல் பரம்பரை இறைமையைப் பறித்தெடுக்க வேண்டுமென்றும் காலம் காலமாக எம் மீது இனவன்முறைகளைக் கட்டவிழ்த்து விடும் பௌத்த சிங்கள பேரினவாதம் கங்கணம் கட்டிநிற்கும் இந்தக் காலச்சூழலில், தமிழ்த் தேசிய இனம் ஒரு தலைமையின் கீழ் கட்டுப்படவோ, கூட்டுத் தலைமையொன்றின் கீழ் ஒன்றுபடவோ முடியாத கையறு நிலையில் மெல்ல மெல்ல கூறுபடத் தொடங்கியுள்ளதை உணர்ந்து, காலத்தின் தேவையையும், இனத்தின் இருப்பை உறுதிசெய்ய வேண்டிய இறுதி நிலையையும் கருதிஈழத்தின் தலைநகரிலிருந்து இரு மதத்தலைவர்கள் இணைந்து முன்னெடுத்திருக்கும் "தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் பொது முயற்சி" ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் நம்பிக்கை தரும் புதியதோர் ஆரம்பமாகவே பார்க்கப்படுகின்றது என்றார். (ம)

## வர்த்தகப் பிரிவுக்குரிய பிரத்தியேக வகுப்புக்கள்

366/8, 1 ஆம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

A/L -2023 புதிய பிரிவு ZOOM ஊடாக ஆரம்பம்

ஆரம்பம் : 03.10.2021
ஞாயிறு பி.ப 3.00 மணி

பொருளியல் - S.ஜெயகுமார்
கணக்கீடு - A.T.சுரேன்
வணிகக் கல்வி - T.S.ரிஷி

077 723 8597


## இறக்குமதியாளர்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்

அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் கருவிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முடிந்தளவிற்கு குறைக்கும் வகையில் நிவாரணம் வழங்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் கருவிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக வர்த்தகர்களும் பொதுமக்களும் எதிர்கொண்டுள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு பிரதமர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ம)


## காணி தேவை

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் 2 - 4 பரப்புக் காணி தேவை.

077 959 6692

## வீடு வாடகைக்கு

யாழ். இராசாவின் தோட்டம் பகுதியில் அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.

076 266 9992
071 978 5097

## D.C.M$_N$ - யாழ்.நகர்

(யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)

A/L 2023

ZOOM ஊடாக
ஆரம்பம் - 02.10.2021
காலை 9.00 மணி (சனிக்கிழமை)

கலை, வர்த்தக புதிய பிரிவு

கலைப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்

தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்
புவியியல் - P.S.V.தினேஸ்
இந்துநாகரிகம் - T.ஸ்ரீஸ்
அரசியல் - பொன் சந்துரு
வரலாறு - S.S.Y. பிரதீபன்
அளவையியல் - T.T.நீதன்
ஊடகக் கல்வி - N.தீபன்
ICT - லவேந்திரன்
நாடகமும் அரங்கியலும் - M.ஜங்கரன்
கிறிஸ்தவ நாகரிகம் - J.J.வசந்தன்
விவசாய விஞ்ஞானம் - B.பாலசுதன்

வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்

பொருளியல் - S.ஜெயக்குமார்
கணக்கீடு - S.தவா
வணிகக் கல்வி - N.S.கபில்

D.C.M$_N$ நிர்வாகி
077 011 9434

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 20 அடிப் பாதையுடன் 5 பரப்புக் காணி சட்டபூர்வமான சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்)

தொடர்புகொள்ளும் நேரம் :
காலை 9.00 – மாலை 6.00 மணிவரை

ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம். (தரகர் தேவையில்லை)

076 221 2037, 077 288 0152, 076 734 1023

## C.C.A - சுன்னாகம்

A/L -2023
கலை, வர்த்தகம்
பிரிவு - II
ZOOM மூலம்
ஆரம்பம் :- 02.10.2021
காலை :- 8.00
முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும்.

## வேலைவாய்ப்பு



Pizza Making Team
பயிலுனர்கள் தேவை.

- வயதெல்லை 18 தொடக்கம் 23 வரை
- முதல் ஆறு மாதங்களுக்கு சம்பளத்துடன்கூடிய பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் நிரந்தர வேலைவாய்ப்பு உண்டு.

076 057 9999

## SUBRA(14) - சித்தங்கேணி

A/L -2023
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
ZOOM ஊடாக ஆரம்பம்
03.10.2021
ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

076 406 3095


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
14
03
1941

ஆண்டவன் திருவடியில்
31
08
2021

அமரர்
### பொன்னையா குகதாசன்
( Rtd. Senior Tax Officer )

அன்பு மொழி பேசி தினம் அறிவுரை புகட்டியதும்
அனைத்த கரங்களுக்குள் பண்பினை வளர்த்ததும்
என்றும் வாழ்வின் பொக்கிஷமாய் அதனைத் தந்ததும்
நீங்கள் தடம் பதித்த காலடியில் மகிழ்ந்து இருந்ததுவும்
எமக்காக உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்ததும்
இன்று நினைக்கையில் எமது இதயம் கரைகிறது
முதுமை நாட்கள் நீண்டிருக்கக் கூடாதா?
முழு உலகையும் உலுக்கிய கொடிய நோய்
எம்மை இந்நிலைக்கு ஆக்கியதே- அப்பா
மாதம் ஒன்று கரைந்ததுவோ மறுக்கின்றதே
ஏற்றுக் கொள்ள மனம் இணங்குதில்லையே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களிற்கும் மற்றும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய நெஞ்சங்களிற்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களிற்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

Skyline, NO. 24, Daya Road, Columbo - 06.
இல. 40, சம்பியன் லேன், கொக்குவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

30.09.2021 – வியாழக்கிழமை

தோற்றம்
12.04.1949

மறைவு
10.10.2020



அமரர்
### இளையதம்பி கந்தவனம்
( நடராசா )
( சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - பழைய மார்க்கெட், நெல்லியடி )

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் உறைந்திருக்கும் உம் முகம்
காவியமாய் வாழ்ந்தீர் - உமை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம் அப்பா
ஆண்டவன் காலடியில் உம்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
( கி. கிருஷ்ணாகரன் - மருமகன்,
அதிபர் – யா/ வல்லை சிவகுரு வித்தியாசாலை )

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.5,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.